

# மொழிஞாயிறு

(2024 - 2025ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

## இரண்டாம் ஆண்டு - மூன்றாம் பருவம்


<u>தொகுப்பாசிரியர்</u>

முனைவர் ஆ.மகாலட்சுமி

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி – 642 001

# மொழிஞாயிறு

(2024 - 2025ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**


தொகுப்பாசிரியர்

முனைவர் ஆ.மகாலட்சுமி

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001.



**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044 - 26251968, 26258410

Language : Tamil

**Mozhignayiru**

Second Year - Semester-III

Compiled by: **Dr. A.Mahalakshmi**

**Nallamuthu Gounder Mahalingam College, (Autonomous)**

**Pollachi - 642 001**

First Edition: June, 2025

Copyright: Publisher

No.of Pages: 142

Publisher :

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN : 978 - 81 - 2344 - 814 - 5

Code No. A 5474

**₹ 120/-**

**Branches**

**Ambattur** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

மொழிஞாயிறு

**இரண்டாம் ஆண்டு - மூன்றாம் பருவம்**

தொகுப்பாசிரியர்: முனைவர் **ஆ.மகாலட்சுமி**

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001.

முதல் பதிப்பு: ஜூன், 2025

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

## Semester-III (மூன்றாம் பருவம்)

## தமிழ் மொழித்திறன்-III (24UTL303)

### மூன்றாம் பருவம் – முன் மாதிரித்தேர்வு – (செய்யுள், இலக்கணம்)

| | வ. எண் | ஆசிரியர் | செய்யுள் பகுதி | நேரப்பங்கீடு (நிமிடங்கள்) |
|---|---|---|---|---|
| அலகு-1 கால அளவு (13) மணி | 1. | இளங்கோவடிகள் | சிலப்பதிகாரம் கால்கோட் கோதை (1-155) | 15 hours |
| | 2. | சீத்தலைச் சாத்தனார் | மணிமேகலை கட்சி மாநகர் புக்க (1-100) வரிகள் | |
| | 3. | புகழேந்திப் புலவர் | நளவெண்பா-நாகம் அளித்த பரிசு | |
| | 4. | கம்பர் | கம்பராமாயணம்- குகப் படலம் (1-25) | |
| | **வ. எண்** | **இலக்கணம்** | **நூல் வெளியீடு** | |
| | 1. | உயர்வு நவிற்சி அணி | சொ.பரமசிவம்<br>நற்றமிழ் இலக்கணம்<br>பட்டுப் பதிப்பகம்<br>12-69-32 வது தெரு<br>'ஐ' பிரிவு, அண்ணா நகர்,<br>சென்னை-600 040 | |
| | 2. | உவமை அணி | | |
| | 3. | எடுத்துக்காட்டு உவமை அணி | | |

### மூன்றாம் பருவம் – முன் மாதிரித்தேர்வு – (உரைநடை, இலக்கிய வரலாறு)

| | வ. எண் | ஆசிரியர் | கட்டுரைத் தலைவர்கள் | நேரப்பங்கீடு (நிமிடங்கள்) |
|---|---|---|---|---|
| | 1. | முனைவர் ம.சித்ரகலா | தொல்காப்பியத்தில் தமிழர் பண்பாடு | 47 - 56 |
| | 2. | முனைவர் பே.மஹேஸ்வரி | சங்க இலக்கியத்தில் குறுநில மன்னர்களின் வாழ்வியல் | |

## அலகு–3

## உரைநடை

# 1. தொல்காப்பியத்தில் தமிழர் பண்பாடு

**முனைவர் ம.சித்ரகலா**
உதவிப் பேராசிரியர்
ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி,
கைப்பேசி-9842250753

உலகத்தின் நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி இலக்கியங்கள் - இலக்கியங்களை வரலாற்றுப் பெட்டகங்கள் என்றே சொல்லலாம். இலக்கியங்கள் அக்கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும், சமூகப் பழக்கவழக்கங்களையும், பண்பட்ட நாகரிகங்களையும் எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல் மன்னர்களின் ஆட்சி முறைகள், நாட்டின் வளங்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றை உணர்த்தும் உன்னதப் பெட்டகமாகவும் திகழ்கிறது. அவ்வகையில் தமிழ் இலக்கியத்தின் செழுமையைப் பறைசாட்டும் ஒப்பற்ற நூலாகவும் முதல் நூலாகவும் திகழ்வது தொல்காப்பியம். தொல்காப்பியம் தமிழின் இலக்கணத்தைச் சொல்வதோடு, தமிழரின் வாழ்க்கை முறையையும் எடுத்தியம்பும் அற்புத நூல் எனலாம். பண்டைய தமிழரின் பண்பாடுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் தொல்காப்பியத்தின பொருளதிகாரத்தின் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகத் திகழ்கின்றது.

## தொல்காப்பியம்

தொல்காப்பியம் அகத்தியரின் பன்னிரு சீடர்களின் ஒருவரான தொல்காப்பியரால் எழுதப்பட்டது என்பர். தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களாகவும் அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்துதேழு இயல்களையும் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தை தொல் + காப்பு + இயல் என்று மூச்சொற்களாகப் பிரித்து தமிழரின் தொன்மையைக் காத்து இயம்பும் நூல் என்று பொருள் கொள்ளலாம். உலகில் உள்ள பல மொழிகளில் இலக்கண நூல்கள் தோன்றியிருப்பினும், அவை அனைத்தும் எழுத்திற்கும் சொல்லிற்கும் மட்டுமே இலக்கணம் கூறுகின்றன. ஆனால், தொல்காப்பியர் மட்டுமே பொருளதிகாரம் என்ற

அதிகாரத்தைத் தொடுத்து, அதில் மனிதனின் வாழ்க்கையை அகம் புறம் என பிரித்ததோடு மட்டுமல்லாமல் மானிட வாழ்வியல் நெறிமுறைகளை இலக்கணமாக வகுத்துக்காட்டியுள்ளார். இதனை மொழியில், இலக்கிய ஆய்வியல், பண்பாட்டுக் கலையியல், உயிரியல், உளவியல், வாழ்வியல் ஆய்வின் அடித்தளமாக அமைவது இந்நூல் (தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.32) என்று சி.இலக்குவனார் குறிப்பிடுகிறார். மேலும், இப்பொருளதிகாரத்தில் கூறப்பெற்றிருக்கின்ற ஒன்பது இயல்களும் ஒன்பது வகைப்பட்ட தனித்தனி நூலென்றே சொல்லலாம். இது தமிழர்தம் அறிவுக் கருவூலம், தமிழக வாழ்க்கை நெறிகாட்டி, மக்களை மாக்களினின்றும் பிரித்து, இருள் தீர்ந்த கண்ணராகச் செய்யும் சூளாமணி விளக்கு, ஒழுக்க உறையுள் விழுப்பெரு முழுமணி, தமிழர் நாகரிகம், போர், படை, குடி செல்வம், காதல், வாழ்வு, அன்பு, முறை, நாடு, நகர், வளம், பிற யாவும் சுரந்து அறிவு வேட்கை ஆற்றும் வற்றாத ஊற்று இஃதெனின் நடுவு பிறழ்ந்ததாகாது. உண்மை வெறும் புகழ்ச்சியன்று (தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், பக். 11-12) என்று செ.ரெ.இராமசாமிப்பிள்ளை கூறுவது முற்றிலும் ஏற்புடையதாகின்றது எனலாம். அவ்வகையில் மனிதனின் வாழ்வியல் அறங்களை பண்பாட்டோடு எடுத்து இயம்பும் தொல்காப்பியம் இன்றைய காலகட்டத்திற்கு இன்றியமையாத தன்மையுடையதாகிறது எனலாம்.

பண்பாடு

பண்பாடு உடையவரை சான்றோர் என்றும் ஒழுக்கமுடையவர் என்றும் பண்பாளர் என்றும் மாசற்றவர் என்றும் ஒளியுடையவர் என்றும் அழைத்தனர். நிலத்தை உழுது பக்குவப்படுத்தி உழவு தொழில் செய்தால் நிலம் பண்பட்டு நல்ல விளைச்சல் விளையும். அதுபோல மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்தி நல்ல மனிதனாக இருக்கவைப்பது பண்பு. பண்பு என்பதை "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவதும்" (கலி.பா. 134) என்று கலித்தொகையும் "பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்" (குறள். 996) என்று திருக்குறளும் குறிப்பிடுகின்றன. பண்பாடு என்ற சொல் தொன்றுதொட்டு வழக்கத்தில் வந்துள்ளது. பண்பு என்ற சொல் தொல்காப்பியத்தில் பல இடங்களில் பயின்று வந்துள்ளதை.

"இசையிலும் குறிப்பினும் பண்பினுந் தோன்றி" (தொல்.உ.

என்ற நூற்பா பண்பு என்ற சொல் பொறியால் உணரப்படும் குணம் எனக் குறிப்பிடுகிறது. ஒருவரின் செயல்பாடுகளால் அவரின் பணிபுநலம் வெளிப்படும்.

உயிர் பாகுபாடும் வாழ்வியல் அறமும்

தொல்காப்பியர் ஓர் ஆண்டை, பருவ காலத்திற்கு ஏற்ப ஆறாக வகுத்துள்ளார். ஆவணி, புரட்டாசி மாதத்தைக் கார்காலம் என்றும்; ஐப்பசி, கார்த்திகை மாதத்தைக் கூதிர் காலம் என்றும்; மார்கழி, தை மாதத்தை முன்பனிக்காலம் என்றும்; மாசி, பங்குனி மாதத்தைப் பின்பனிக் காலம் என்றும் சித்திரை, வைகாசி மாதத்தை இளவேனிற்காலம் என்றும், ஆனி, ஆடி மாதத்தை முதுவேனிற்காலம் என்றும் பிரித்தனர். ஓர் ஆண்டை ஆறு பெரும்பொழுதாகப் பிரித்தது போல ஒரு நாளையும் வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று ஆறு சிறுபொழுதாகப் பிரித்தனர். காலத்தைப் பிரித்தது போலவே உயிர் பகுப்பையும் பகுத்துக்காட்டியுள்ளார். பலகோடி ஆண்டுகளுக்கு முன்பே இப்பூவுலகில் பல கோடி உயிரினங்கள் தோன்றியிருக்கும். அவ்வாறு பிறக்கப்பட்ட உயிரினங்களைத் தொல்காப்பியர் அறு வகையாகப் பிரித்ததை,

“ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே
ஆறறிவதுவே அவற்றோடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே” (தொல். பொ. 571)

எனும் நூற்பா மூலம் உயிர்களின் இயல்புகளைப் பாகுபடுத்திக் கூறியுள்ளார். இவற்றுள் பகுத்தறிவோடு தோன்றிய ஆறறிவு படைத்த மனிதர்களின் வேறுபாட்டினை உணர்த்தும் வகையில் வள்ளுவப் பெருந்தகை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள். 972)

இவ்வாறு மக்கள் பிறப்பால் ஒத்தவர்களாயினும் பெருமை, சிறுமை என்னும் அவர்களது சிறப்பியல்புகள் அவர்கள் செய்யும் தொழில்களின் வேறுபாட்டால் ஒத்திருப்பதில்லை என்கிறது திருக்குறள். பிறப்பினுள் சிறந்தது மானிடப்பிறவியே என்பதை, “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அதனினும் அரிது” (ஔ.நீ.ப. 47) என்று ஔவையார் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அரிதான மானிட பிறவியில் வாழ்கின்ற காலத்தில் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி எவ்வுயிர்க்கும் தீங்கு நேராத வண்ணம் புகழ் வேண்டாது அறம் செய்து வாழ்வதே வாழ்வில் நன்மையளிக்கும் என்கிறார்.

## அகவாழ்வு

தொல்காப்பியர் அகவாழ்க்கையை ஏழு வகையாகப் பிரித்துள்ளார். இதனை

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (தொ.பொ.அக. 1

எனப் பாகுபடுத்திக் காட்டியுள்ளார். ஐந்திணை ஒழுக்கங்களாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன அனைத்து நில மக்களுக்கும் பொதுவான செயல்பாடுகளாக இருப்பினும் தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு செயல்பாடுகளில் இலக்கணம் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பண்டைய தமிழர் திருமணமும் இல்லறமும்

திருமணம் என்ற ஒரு முறை ஆதிகாலங்களில் இல்லை என்றும் என்று பொய் தோன்றியதோ அன்றே திருமணம் என்ற ஒன்று உருவானது என்கிறார் தொல்காப்பியர். இதனைப் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல்.கற்.நூ.4 என்கிறார். தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் சந்தித்த பின்னர் கற்பு வாழ்க்கையை நடத்த திருமண பந்தம் தேவைப்பட்டதை

"கற்பெனப்படுவது கரணமொடுபுணரக்
கொளற்குரி மரபிற கிழவன் கிழத்தியைக்
கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"
(தொல்.பொருள்.கற்பு.நூ.1

என உள்ளத்தால் இணைந்தவர் திருமண உறவின்வழி மனையறம் நடத்த உரிமை செய்தளிக்கும் செயல்முறையே பண்டைய தமிழரின் திருமணச்சடங்காகும். மேலும், திருமணம் செய்யும் ஆணும் பெண்ணும் பத்து வகை பண்புகளால் ஒத்திருக்க வேண்டும் என்பதை

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காமவாயில்

நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

(தொல்.பொருள்.மெய்நூ. 25

என்பதைக் குறிப்பிடுகின்றது. மேலும், ஆண்மகனின் பண்பு நலன்களாக பெருமையும் உரனும் ஆடவர்க்குரிய பண்பாகவும் (தொ.க.நூ. 7) அச்சம், நாண், மடம், நிச்சம் (பயிர்ப்பு) ஆகியவை பெண்களின் குணமாகவும் (தொ.க.நூ. 8) எனத் தொல்காப்பியம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பகுத்து வகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆண், பெண் என்ற பாகுபாட்டில் ஆண்பிள்ளையே உயர்வு என்றும் சொத்து என்றும் பெண்பிள்ளையாக இருந்தால் கள்ளிப்பாலுக்கு இரையாகக் கொடுப்பதும் பெண்ணை தாழ்வாக எண்ணுவதுமாக இருந்த சமுதாய நிலையை மாற்ற "ஆணுக்கிங்கே பெண் இளைப்பிள்ளை" என்ற பாரதியின் முழக்கத்தை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆணும் பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் இல்லறத்தில் சமநிலை பாங்கு உடைவர் என்பதை தொல்காப்பியர்,

"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலை புலவியுள் உரிய" (தொல்.1173)

என்ற நூற்பாவில் பெண்மையை உயர்த்தியுள்ளார். குடும்ப வாழ்வு இனிதாக அமைய தலைவிடம் தலைவன் பணிதல் தரம் தாழ்ந்த செயல் அல்ல என்பதையும் குடும்ப நலனில் கணவனும் மனைவியும் நம்மில் யார் பெரியவர் யாருடைய சொல் உயர்வாக இருக்க வேண்டும் என்பதில் போட்டி இருப்பதைவிட குடும்ப முன்னேற்றத்திற்குச் சிறந்தது எது என்பதைத் தீர்மானித்து வாழ்க்கை நடத்தினால் இல்லற வாழ்வு இனிதுரும்.

### விருந்தோம்பல்

விருந்து என்பது புதுமை "விருந்து தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல்.பொருள். 237) என இல்லத்தில் வந்த புதியவர்களை உபசரித்து விருந்து படைத்தல் அன்பின் வெளிப்பாடாக இருந்தது. பிறகு, இப்பழக்கம் இல்லத்தின் பண்பாக மாறியது இல்லறத்தில் உள்ள தலைவனும் தலைவியும் விருந்தினரைப் போற்றுதல் சிறந்த பண்பு என்பதை தொல்காப்பியர்.

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (கற்பியல். 11)

என்று குறிப்பிடுகிறார். எட்டு வகை வனப்புகளில் விருந்து ஒரு வனப்பாகச் (தொல்.பொ.551) சொல்கிறார் தொல்காப்பியர். மேலும், தலைவனும் தலைவியும் ஊடல் கொண்டிருக்கும்போது விருந்தினர் வந்தால், ஊடல் இருப்பது தவிர்க்கப்படுதலால் விருந்தினர் ஊடல் தீர்க்கும் வாயிலாகக் கருதப்பட்டதும் உண்டு இன்றுவரை உள்ள தமிழர் பண்பாடும் அதுவாகவே உள்ளது.

மேலும், விருந்தினர் வந்தால் முகமலர்ந்து உபசரிக்க வேண்டும் என்பதை,

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (குறள். 90)

எனத் திருக்குறளும்

ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும்

என விவேகசிந்தாமணியும் எடுத்தியம்புகிறது. "விழுப்புண் படாத நாலெல்லாம் வீழ்நாள்" என்று மறவன் கருதுவது போல விருந்தினர் வாரா நாளெல்லாம் வீணானநாளாகப் பண்டைய தமிழர் கருதினர். மேலும், எவ்வளவு பெரிய கிடைக்கப்பெறாத உணவே என்றாலும் விருந்தினரோடு உண்பதே மகிழ்வு என்பதை,

"இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே" (புறம். 182)

எனவும் "மருந்தே யாயினும் விருந்தோடு உண்" என ஔவைப் பிராட்டியும் கூறுவதிலிருந்து காலந்தோறும் தமிழ் இனம் விருந்து போற்றுகிறது என்பது புலனாகின்றது. மேலும், விருந்தினர் எத்தனை முறை வந்தாலும் முதல் நாள் வந்தபோது எப்படி உபசரித்தோமோ அதே முகமலர்ச்சியோடு விருந்து படைக்க வேண்டும் என்பதை,

'ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ' (புறம். 101)

என்ற புறநானூற்றுப் பாடல்வழி அறியலாம். ஆக தொல்காப்பியர் காலம் தொட்டு இன்றுவரை விருந்து போற்றப்படுவது தமிழரின் பண்பாட்டு சிறப்பு எனலாம். அதே நிலையில் இருந்த விருந்து இன்று சில மாற்றத்திற்கும் தள்ளாட்டத்திற்கும் உட்பட்டுவிட்டது. இன்றைய புதிய நாகரிகமாக வலம்வரும் இந்த மாற்றத்தை இளைஞர்களாகிய நீங்கள் மாற்ற முன்வர வேண்டும். அப்போதுதான் பழைய பாரம்பரியமான தமது பண்பாடு காக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கை

நம்பிக்கை என்பது மக்களால் காலந்தோறும் பின்பற்றப்படும் செயல் என்றே சொல்லலாம். "நம்பிக்கை ஒரு சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியையும், பண்பாட்டு கலாச்சாரத்தையும் புலப்படுத்தும் களமாக அமைகின்றன" (சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம் ப. 45) என கோமதி சங்கர் கூறுகிறார். அவ்வகையில் நிமித்தம் பார்த்தல் ஒரு வகையான நம்பிக்கையாகும். நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழ இருப்பதை முன்பே அறிதல் எனலாம். "வாழ்வில் பின் நிகழ்விற்குள் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவது நிமித்தம்" (தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 10) என்று கா.காந்தி குறிப்பிடுகிறார். பறவைகளை வைத்து நிமித்தம்

பார்த்தல், விரிச்சி கேட்டல், நல்ல நேரம் பார்த்தல், பல்லி சொல் கேட்டல், கண் துடிப்பு போன்ற செயல்களை வைத்து நிமித்தம் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை.

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் (தொல். 1037)

என்ற நூற்பா உணர்த்தி நிற்கின்றது. மேலும் மன்னர்கள் போருக்குச் செல்வதற்கு முன்னர்தன் வெண்கொற்றக் குடையினையும் வாளினையும் நல்ல நாள் பார்த்து புறப்படச் செய்வதை,

"குடையும் வாளும் நாள் கோளன்றி
மடையமை ஏணிமிசைமயக்கமும் கடைசிக்
...
அகத்தோன்வீழ்ந்த நொச்சியும் (தொல்.பொ.நூ. 30)

என பண்டைத் தமிழர் பயணம் செல்லும் முன் சகுனம் பார்த்ததை "புலரி விடியல்புள் ஓர்த்துக் கழிமின்" (மலை. 448) என்ற வரி புலப்படுத்தி நிற்கின்றது.

## பிரிவு காட்டும் அறம்

தலைவன் தலைவியை ஏதேனும் ஒரு காரணத்தின் பொருட்டுப் பிரிந்துசெல்லும் மரபு பழந்தமிழகத்தில் இருந்தது. சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியை விட்டு பல காரணங்களுக்காகப் பிரிந்து செல்லும் பாடல்கள் உள்ளன. இதனை,

"ஓதல் காவல் பகைதணிவினையே
வேந்தர்க் குற்றுழிபொருட்பிணி பரத்தையென்று
ஆங்க ஆறே அவ்வயிற் பிரிவே" (இறை.களவியல்.நூ. 35)

எனக் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியத்தில் "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை". (தொல்.அகம்.நூல். 37) எனக் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடும் "முந்நீர் வழக்கம் என்பது கப்பல் வழியாகக் கடல் கடந்து செல்லும் வழக்கம்" மகளிருக்கு இல்லை என்று இளம்பூரணர் குறிப்பிடுகிறார். முந்நீர் என்பதை ஓதல், தூது, பொருள் ஆகிய மூன்று காரணங்களால் செல்லும் பிரிவு என்று நச்சினார்க்கினியர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். ஆக, தொல்காப்பியர் காலத்தில் இருந்த இப்பிரிவுகள் இன்றைய காலகட்டத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதும், ஓதல் பிரிவு என்பது ஆண் பெண் இரு பாலருக்கும் அவசியம் தேவை என்பதை, கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்று ஔவைப்பிராட்டியும், பொருள் நிமித்தமாகப் பிரிவு இன்று கட்டாயம் அவசியம் என்பதைப் பொருள்

இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று திருவள்ளுவப் பெருந்தகையு எடுத்தியம்பியது இன்றைய காலத்திற்குப் பொருந்தும் எனலாம் மேலும், ஒருவன் கல்வி கற்பதற்காகத் தன் குடும்பத்தை விட்டு பிரியு பிரிவு மூன்று ஆண்டுகளுக்கு மேல் செல்லாது. அதேபோல அரசனுக்காகப் பகைவர் நாட்டிற்குத் தூது செல்லப் பிரியும் பிரி ஓராண்டிற்குள் நடைபெறும், இதற்கு மேல் செல்லாது. தன் இல்வாழ்க்கையைச் சீரும் சிறப்பாக நடத்த பொருள் தேவை அந் பொருளை ஈட்டுவதற்காகச் செல்லும் பிரிவு ஒருவருடத்திற்கு மேல் செல்லாது எனத் தொல்காப்பியம் கருதுகின்றது. ஆக, கல்வியைத் தெளிவாகக் கற்க வேண்டும் எனத் தொல்காப்பியர் பிரிவில் கல்வி கற்கும் கால அளவை மட்டும் மிகைப்படுத்தியுள்ளார். "கல்வியறிவு வாய்க்காதவர்கள் செல்வத்தை ஒழுங்கான நடைமுறையில் ஈட்டும் வகையினையும், ஈட்டிய பொருளை அங்ஙனமே நன்முறையில் செலவிட்டு இம்மை, மறுமை இன்பங்களை எய்தும் வகையினையு அறியார். ஏதேனும் வகையில் செல்வம் கிடைத்துவிட்டால், அதைபே தெய்வமாகக் கருதிக்கொண்டு உண்மை வாழ்வியலைச் சிதைத்து கொள்வார்கள். இதன்ன நன்குணர்ந்திருந்த தமிழ்ச்சான்றோர், கல்வி செல்வத்தின் மாட்சியை முன்நிறுத்தி வலியுறுத்திக்காட்டி, அதை அடுத்த பொருட்செல்வத்தை நிறுத்தி பேசாநின்றனர்" (தொல்காப்பிய காட்டும் வாழ்க்கை, ப. 503) என ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறா இதனை உற்றுநோக்குங்கால் காலந்தோறும் கல்வியின் தேவையு இன்றியமையாத தன்மையும் தமிழர் பண்பாட்டில் நீங்கா இடம்பெற்றுள்ளது எனலாம்.

## வாழ்வின் கடமை

தலைவனும் தலைவியும் வாழ்ந்ததன் பயனாகத் தன் குழந்தைகளுக்கு நல்ல பழக்கத்தையும் நல்ல உறவுகளையு தேடித்தருவதே சிறப்பு. இன்றைய காலகட்டத்தில் தன் பிள்ளைகளுக்கு தேடித் தேடி பொருளைச் சேர்க்கின்றார்களே தவிர, தன் பிள்ளையுடன் தனது நேரத்தைச் செலவிடுவதும் உறவுகளோடு இணைந்திருப்பதும் பாசத்தையும், நேசத்தையும், ஒழுக்கத்தையும் கற்றுக்கொடுப்பதற்கு இன்றைய பெற்றோருக்கு நேரமில்லாத சூழலில் பணத்திற்கா ஓடுகின்றனர். இல்லறம் நடத்திய தலைவனுக்கும் தலைவிக்கும் உள் சிறந்த வாழ்வியல் கடமையாக,

காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இருந்ததன் பயனே (தொல்.கற்பு. ...

என உறவுகளோடு இணைந்திருத்தலே சிறப்பு என்கிறார். இன்றைய காலகட்டத்தில் உறவுகளின் அருமை அறியாது பிள்ளைகள் வளர்வதும் பெற்றோரின் பெருமை அறியாது அயலக மோகம் கொள்வதும், தொலைபேசியின்வழி தன் பெற்றோருக்கு ஈமக்கடன் செய்வதும் அதனை படக்காட்சியாக முகநூலில் போடுவதும் ஸ்டேட்டஸ் வைப்பது நாகரிகமாக வளர்ந்துவருவது கண்கூடே எனலாம். ஆக என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் நான் மகிழ்ச்சியாக இருப்பேன் என்ற தன்னல நிலை மாறி, உறவுகளோடு இணைந்து இருப்பதே இன்பம் என வாழ்ந்தால், பண்டைய பண்பாடு காக்கப்படும் என்பது திண்ணம்.

பகிர்ந்து வாழ்தல்

பண்டையத் தமிழர் எப்பொருளையும் தனக்கே உரியது என எண்ணாமல் பகிர்ந்துகொடுத்து மகிழ்ந்தனர். இதனை,

"தந்து நிறை பாதீடு உண்டாட்டு உயர் கொடை" (தொல்.நு.20)

எனப் பாதிர் என்று சுட்டிக்காட்டுகிறார். இவ்வாறே சங்க கால மன்னர்கள் போரில் பெற்ற செல்வங்களைத் தன்னுடைய புலவர்களுக்கும் வீரர்களுக்கும் வாரி வழங்கியதோடு, பெருஞ்சோறு கொடுத்து மகிழ்ந்தான் என்பதை (புறம்.பா. 235.1-6) பாடல் விளக்குகிறது. இதுபோலவே பண்டைத் தமிழர் பண்டமாற்றுமூலம் தன் தேவைகளை நிறைவுசெய்து பகிர்ந்துகொண்டனர் என்பதை (பொருநர். 214-217) பாடல்வரி விளக்குகிறது. அதே போல உமணர்கள் உப்பைக் கொடுத்து நெல்லையும் பிற பொருள்களையும் பெற்றதை (அகம், 140:5-8) பாடல் தெளிவுபடுத்துகிறது. ஆக, "செல்வத்தின் பயன் ஈதல்" ஆகவே, செல்வம் பெற்றவர் இல்லாதவர்க்குப் பகிர்ந்து கொடுத்து வாழ்ந்தால் உலக வாழ்வு சிறப்புறும். அப்படி அல்லாமல் தானே உண்டு வாழலாம் என்றும், தன் சந்ததியினர்க்கும் தன்னுடைய அடுத்த சந்ததியினருக்கும் சொத்து சேர்த்து தனித்து உண்ணலாம் என எண்ணல் சிறப்பன்று. நாம் அனைவரும் காந்தி மகனாக எல்லா ரூபாய் நோட்டுக்களிலும் இடம்பெறாவிட்டாலும் பரவாயில்லை. இல்லாதவர்க்கு கொடுத்துதவி, நல்ல மனித நேயமிக்க மனிதனாகவாவது வாழ்வோம்.

ஆக, பண்டைய தமிழர் போற்றிக் காத்த நல்லறங்களை நாமும் பேணிக்காப்போம். புதிய தலைமுறையினருக்கு நல்லதைக் கற்றுக்கொடுத்து முன்னுதாரணமாக வாழ்வோம். இயற்கையோடு இணைந்து வாழ்வோம். நம் நாட்டு விழாக்களுக்கும், உணவுப் பொருட்களுக்கும் மதிப்பளித்து அதனை முறைப்படுத்துவோம். அயலகப்பொருட்களை வெறுப்போம் எனச் சொல்லவில்லை.

நம்நாட்டுப் பொருளின் மகத்துவம் அறிவோம் என்பதே, சிறந்த புரிதலுக்கு உரியது. ஆக, வாழ்வாங்குவாழ நமது பண்டைய பண்பாட்டு மரபுகளைப் பேணிக் காப்போம். வாழ்வாங்கு வாழ்வோம்.

## துணைநின்ற நூல்கள்


1. தொல்காப்பியம்
2. தொல்காப்பிய ஆராய்ச்சி
3. கலித்தொகை
4. புறநானூறு
5. பொருநராற்றுப்படை
6. அகநானூறு
7. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
8. ஔவையார் நீதி நூல்
9. தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்
10. திருக்குறள்
11. இறையனார் களவியலுரை
12. சமூக நோக்கில் நீதி இலக்கியம்